NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 30 June 2018

## உலகத் தரவரிசை குறித்து நிபுணர்கள் குழு கருத்து

# பல்கலைக்கழகங்களின் முழுத் திறனை வெளிப்படுத்துவதில்லை

எல்லா பல்கலைக்கழகங்களையும் ஒரே அளவுகோலில் மதிப்பிடும் தற்போதைய பல்கலைக்கழக தரவரிசை முறையில்லாதது என்று கல்வி அமைச்சர் ஓங் யி காங் கூறியுள்ளார்.

மூன்று நாள் கூட்டத்தின் முடிவில் அனைத்துலக நிபுணர் குழுவின் கருத்தும் இதுவாகவே இருந்தது.

"பரந்த அளவிலான மதிப்பீட்டு முறை தேவை. ஏனெனில் சிங்கப்பூரின் ஆறு சுயேட்சைப் பல்கலைக்கழகங்களுக்கும் தனித்தனியான இலக்குடன் சமுதாய, பொருளியல் குறிக்கோளும் உள்ளன," என்று திரு ஓங் அனைத்துலக கல்வித்துறை ஆலோசனை குழு கூட்டத்தின் முடிவில் தெரிவித்தார்.

"ஒருவேளை ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் வெற்றியையும் சாதனைகளையும் மதிப்பிட வெவ்வேறு வகையான அளவுகோல்கள் தேவைப்படலாம்," என்றார் அவர்.

கல்வி அமைச்சுக்கும் சிங்கப்பூரின் பல்கலைக்கழகங்களுக்கும் கல்வி, ஆய்வுத் துறையின் போக்குகள் குறித்த ஆலோசனை வழங்குவதற்காக ஒவ்வொரு இரண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சந்திக்கும் இந்தக் குழுவின் 11வது கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

லண்டன் இம்பீரியல் கல்லூரி, கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் போன்ற முன்னணி அமைப்புகள், பல்கலலைக்கழகங்களின் 11 பிரதிநிதிகள் அடங்கிய இக்குழுவின் தலைவராக துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம் உள்ளார்.

சிங்கப்பூரின் ஆறு சுயேட்சைப் பல்கலைக்கழுங்களின் தலைவர்களும் கூட்டங்களில் பங்கேற்றனர்.

பட்டக்கல்வியின் மதிப்பு, ஆயுட்கால கல்வி, தாக்கத்தை ஏற்படுத்தும் ஆய்வு ஆகிய மூன்று முக்கிய தலைப்புகளில் இந்த ஆண்டு குழு உறுப்பினர்கள் விவாதித்தனர்.

உலகத் தரவரிசைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை, பல்கலைக்கழகங்களின் முக்கிய இலக்கை அடிப்படைப்படையாகக்கொண்டு அவற்றின் செயல்பாட்டைக் கணிக்க வழி காண வேண்டுமென்பது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான பேராசிரியர் ஸ்டெஃபென் டூபியின் கருத்து.

"இது குறிப்பாக சிங்கப்பூருக்கு முக்கியமானது. இது குறைந்த பல்கலைக்கழகங்களைக் கொண்ட சிறிய நாடு," என்ற அவர், வெவ்வேறு பல்கலைக்கழகங்களுக்கு வெவ்வேறு பங்குகள் உண்டு என்றார்

பணியிட பயிற்சிக்கல்வி, வெளிநாடுகளுக்கு அறிமுகம் போன்ற அனுபவக் கற்றல் முறையை நோக்கிச் செல்லும் சிங்கப்பூர் சரியான பாதையில் செல்கிறது என்று கல்வி அமைச்சர் ஓங் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.